*1973 மார்ச் 30] [பேரவைத் துணைத் தலைவர்]*

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால், 1973-74-ம் ஆண்டு அவையினர் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

பேரவையின் 221 (1)-வது விதிக்கிணங்க :—

1. திரு. எஸ். கே. வடிவேலு.
2. திரு. ப. முத்துசாமி.
3. திரு. என். எஸ். பலராமன்.
4. திரு. ஏ. பாலையா.

ஆகியோர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன். பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

**(இ) சட்டவிதிகள் ஆய்வுக்குழுவிற்கு நியமனம்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டப் பேரவையின் 201 (1) விதியின் கீழ் 1973-74-ம் ஆண்டிற்கு பின் வரும் சட்டப்பேரவை உறுப்பினர்களை சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
2. திரு. மணலி சி. கந்தசாமி.
3. திரு. கே. கந்தசாமி.
4. திரு. ச. சங்குமுத்து தேவர்.
5. திரு. சி. வே. வேலப்பன்.
6. திரு. எம். ஏ. லத்தீப்.
7. திரு. எம். சுப்பிரமணியம்.
8. திரு. மு. சுருளிவேல்.
9. திரு. எம். தேவராசன்.
10. திரு. ஏ. இராசமாணிக்கம்.
11. திரு. கே. பழனிவேலன்.
12. திரு. வி. இராசகோபால்.

**பேரவைத் துணைத் தலைவர் இக்குழுவின் தலைவர் ஆவார்.**

*திரு. கே. டி. கே. தங்கமணி*: சார், அறிவிப்பின்பேரில் ஒரு சிறு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு ரூல்ஸ் கமிட்டி ஒரு தடவை கூட கூடவே இல்லை. ஆகவே, அந்தக் கமிட்டியை அமைக்கிறபோது ஒரு தடவையாவது அந்தக் குழு கூடவேண்டுமென்று கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: சென்ற ஆண்டு அதனுடைய தலைவராக நான் இல்லை.

8. அறிக்கை அளித்தல்.

**(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.**

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண். 3/73) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை * இப்பேரவை முன் வைக்கிறேன்.

**(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் 4-வது அறிக்கையை அளித்தல்.**

THIRU K. A. WAHAB: As Chairman of the Committee on Government Assurances, I rise to present the Fourth Report (Fifth Assembly) of the Committee.

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

**(ஈ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

---

* 30—3—1973-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.